# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 60/2023 | **CNR No.** | : | TNKI13-000075-2023 |
| **Name** | : | குமரேசன் | **Father's Name** | : | பொன்னுசாமி (எ) அண்ணாமலை |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW1 |
| **Age** | : | 75 | **Village** | : | மண்ணாண்டியூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 12:37 PM | **End Time** | : | 1:00 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18.02.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

(1) வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஊரில் உள்ளது என்றால் கெங்கப்பிராம்பட்டி பஞ்சாயத்து கெங்கிநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து சம்பந்தமாக என்ன பரிகாரம் கேட்டுள்னேன் என்றால் விற்பனை செய்ய கூடாது என்று கேட்டுள்ளேன். வழக்கு சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று நான் வழக்குரையில் கோரியுள்ளேனா என்றால் ஆமாம். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். வழக்குரை காட்டப்பட்டு, எனது வழக்குரையில் எனக்கு வழக்கு பத்தி உரிமை உள்ளதா நான் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

(2) வழக்கு சொத்து சம்பந்தமாக வேறு எதாவது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக

வருவாய் துறை ஆவணங்களோ, வில்லங்க சான்றுகளோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக வழக்கில் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அண்ணாமலை அனுபவித்து வருகிறார் என்று காட்டுவதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து சம்பந்தமாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கு பிறகு எதாவது விற்பனை ஏற்பட்டுள்ளதா என்றால் விற்பனை செய்துள்ளார். நான் சொல்லும் விற்பனை ஆவணம் எண்ணிடம் காட்டப்படும் ஆவணமா என்றால் சரிதான், ஆனால் அவரே திரும்பி மறு கிரையம் செய்து வாங்கியுள்ளார். **(12.06.2019 தேதியிட்ட கிரைய ஆவணம் ஆவண எண். 2805/2019 – பதிவிறக்க பதிவு நகல் – பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இதில் 1ம் பிரதிவாதி அண்ணாமலை சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் 2ம் பிரதிவாதி தான் தனிபட்ட சுவாதின அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது அவர் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்து இல்லை, அனைவரும் சேர்ந்து தான் பூர்வீக சொத்தின் வருவாய் கொண்டு வாங்கினோம்.

(3) நான் சொல்லும் பூர்வீக சொத்து சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நானும் அண்ணாமலையும் சேர்ந்து பூர்வீக சொத்தை 2ம் பிரதிவாதி அடைய கூடாது என்று அண்ணாமலை மகனான மைனர். கார்த்திக் என்றவர் பெயரில் தான செட்டில் மெண்ட் எழுதி உள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும், நகலானது மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். **(16.06.2021**

**தேதியிட்ட தான செட்டில் மென்ட் பத்திரம் ஆவண எண்.3121/2021 – பதிவிறக்க பதிவு நகல் – பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்தை தாண்டி தான் பூர்வீக சொத்திற்கு சென்றடைய வேண்டும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் தேதி தெரியாது. எனக்கு பூர்வீக சொத்தை தவிர வேறு எதாவது நிலமோ வீட்டு இடமோ உள்ளதா என்றால் ஊத்தங்கரையில் வீட்டு இடம் உள்ளது, அதன் மதிப்பு என்னவென்றால் எனக்கு தெரியாது. அதன் விஸ்த்தீரணம் என்னவென்றால் 3 சென்ட் ஆகும், அது சுமார் 50 லட்சம் மதிப்பு உள்ளதா என்றால் தெரியாது. மேற்படி வீட்டு இடத்தை தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் அடமானம் வைத்திருந்தேன் என்றால் சரிதான். அதை எப்போது மீட்டு எடுத்தேன் என்றால் 2023ம் ஆண்டு மீட்டு எடுத்தேன். அதை மீட்டு எடுக்க 2ம் பிரதிவாதி சுரேஷ் இடம் பணம் கேட்டேனா என்றால் இல்லை, சுரேஷ் தான் மீட்டு எடுத்து பத்திரத்தை கொண்டு வந்து கொடுத்தார்.

(4) எண்ணிடம் காட்டப்படும் ஆவணமானது மீட்டு எடுத்த ரசீது என்றால் எனக்கு தெரியவில்லை. அடமானத்தை மீட்டு எடுக்கும் பொழுது நான் பணம் கேட்டேன் என்றும் அதை அவர் கொடுக்க முடியாது என்று சொன்னதனால் பொய்யாக இந்த வழக்கை ஜீவனம்சம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை வாதி அனுபவிக்க கூடாது என்று பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சுரேஷ் தான் வழக்கு சொத்தில் தேங்காய் மரங்களை அறுவடை செய்து அனுபவித்து வருகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai